**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.24/2022**

**வாதி தரப்பு சாட்சி 1 ஹேமலதா**

24.02.2025 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திரு.பிரமிளா தேவி, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

I.A.No.6/2024 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் வாதி சாட்சி 1 ஹேமலதா திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:

கோபு என்பவர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் உறவினர் இல்லை தெரிந்தவர். கோபு என்பவரை எனக்கு எத்தனை வருடங்களா தெரியும் என்றால் 25 ஆண்டுகளாக தெரியும். யார் மூலமாக கோபுவை எனக்கு தெரியும் என்றால் அவர் என் அப்பாவிற்கும் மாமனாருக்கும் தெரிந்தவர், அவரும் என் அப்பாவும் ஒரே ஊர், அதனால் தெரியும். கோபுவிற்கு என் கணவர் பணம் எதாவது கொடுத்திருக்கிறாரா என்றால் கொடுத்திருக்கிறார். கோபுவிற்கு என் கணவர் எவ்வளவு பணம் கொடுத்திருக்கிறார் என்றால் எவ்வளவு பணம் என்று தெரியாது. எந்த வருடம், தேதி, மாதம் என் கணவர் பணம் கொடுத்தார் என்றால் அது தெரியாது. 2ம் பிரதிவாதி சசிகலா மீது என் கணவரும் ஒரு வழக்கு போட்டுள்ளார் என்றால் ஆமாம். அது என்ன வழக்கு என்றால் கடன் திருப்பிகேட்டு வழக்கு போட்டுள்ளார். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் குடும்ப பொறுப்புகளை கவனிக்கிறேன்.

எனக்கு மணிகண்டன் என்பவரை தெரியுமா என்றால் தெரியும், அவர் கோபுவின் மகன் ஆவார். மணிகண்டன்,ஜெயலட்சுமி, ராஜேஸ்வரி, கோதைநாயகி ஆகியோர் சேர்ந்து பாகப்பிரிவினை வழக்கினை சசிகலா மீது தாக்கல் செய்துள்ளது எனக்கு தெரியுமா என்றால் வழக்கு போட்டிருப்பதாக

கூறினார்கள். சசிகலா குடும்பத்திற்கு எவ்வளவு சொத்து உள்ளது என்று தெரியுமா என்றால் வீடு மற்றும் நெல் அறைக்கும் மிஷின் உள்ளது. மேற்படி சொத்து சசிகலா குடும்பத்திற்கு பாத்தியம் என்று எப்படி தெரிந்துகொண்டேன் என்றால் ஊரில் பேசிக்கொண்டவகையில் தெரிந்துகொண்டேன். நானும் என் கணவர் பிரபாகரன் மற்றும் மணிகண்டன், ஜெயலட்சுமி, ராஜேஸ்வரி, கோதைநாயகி ஆகியோர்களும் சேர்ந்து சசிகலாவை பழிவாங்கும் நோக்கத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் சசிகலா மீது மேலும் பலவழக்குகள் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது, பழிவாங்கும் நோக்கத்தில் நாங்கள் வழக்கு தாக்கல் செய்யவில்லை. தவறான நோக்கத்தில் சசிகலா மீது இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.